**செய்தி வெளியீடு எண்:1271** **நாள்:03.12.2021**

<u>செய்தி வெளியீடு</u>

**சிறுமி இசக்கியம்மாள் தொடர் சிகிச்சைக்காக 5 இலட்சம் ரூபாய் நிதியுதவி மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கினார்.**

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களை இன்று (3.12.2021) தலைமைச் செயலகத்தில், செங்கோட்டையைச் சேர்ந்த சிறுமி இசக்கியம்மாள் பெற்றோர் திரு.எஸ்.சீதாராஜ் - திருமதி பிரேமா ஆகியோர் சந்தித்து, தனது மகள் துணி வெளுப்பதற்கு உபயோகிக்கும் இராசயன திரவத்தை தவறுதலாக குடித்ததால், உணவுக்குழாய் பாதிக்கப்பட்டு மிகவும் நலிவுற்ற நிலையில் இருப்பதை அறிந்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மேற்கொண்ட முயற்சியின் காரணமாக சென்னை, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டு பெரிய அரிய அறுவை சிகிச்சை மேற்கொள்ளப்பட்டு தற்போது உடல்நலம் தேறிவருவதற்கு நன்றி தெரிவித்தார்கள்.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் சிறுமி இசக்கியம்மாள் தொடர் சிகிச்சைக்காக முதலமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து 5 இலட்சம் ரூபாய்க்கான காசோலையை சிறுமியின் பெற்றோரிடம் வழங்கி, அச்சிறுமியிடம் உடல்நலம் குறித்து கேட்டறிந்தார்.

மேலும், சிறுமி இசக்கியம்மாளுக்கு அரிய அறுவை சிகிச்சையை சிறப்பான முறையில் அர்ப்பணிப்பு உணர்வோடு மேற்கொண்ட எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனை இயக்குநர் மருத்துவர் எஸ்.எழிலரசி, எழும்பூர் குழந்தைகள் நல மருத்துவமனையின் அறுவை சிகிச்சை துறைத் தலைவர் மருத்துவர் ஆர்.வேல்முருகன், அறுவை சிகிச்சை நிபுணர் பேராசிரியர் மருத்துவர் ஆர்.செந்தில்நாதன், செவிலியர்கள் ஜி.ஆர்த்திப்ரியா, ஆர்.காயத்திரி ஆகியோருக்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் நினைவுப் பரிசு வழங்கி பாராட்டினார்.

இந்நிகழ்வின்போது, மாண்புமிகு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு.மா.சுப்பிரமணியன், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை முதன்மைச் செயலாளர் மருத்துவர் ஜெ.ராதாகிருஷ்ணன், இ.ஆ.ப., மருத்துவக் கல்வி இயக்குநர் டாக்டர் ஆர்.நாராயணபாபு, சென்னை ராஜிவ் காந்தி அரசு பொது மருத்துவமனை முதல்வர் மருத்துவர் தேரணிராஜன் ஆகியோர் உடனிருந்தனர்.

•••••••••••

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**